மாகாணக் கல்வித் திணைக்களம் கிழக்கு மாகாணம்
**Provincial Department of Education, Eastern Province**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர) முன்னோடி கணிப்பீடு, 2023(2024)
**General Certificate of Education (Ordinary Level) Pilot Assessment, 2023(2024)**

வரலாறு - I
History - I

33 T I

ஒரு மணித்தியாலம்
One Hour

கவனிக்க :

- ❖ இவ்வினாப்பத்திரம் 40 வினாக்களைக் கொண்டது.
- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- ❖ தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளுள் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

சுட்டெண் : ..........................

**புள்ளிகள்**

பகுதி - I

1. நெச்சுரலிஸ் ஹிஸ்டோரியா ( இயற்கை வரலாறு) என்னும் நூலின் ஆசிரியர்.
   1. பாகியன் தேரர் 2. இபின் பதூதா 3. பிளினி 4. பிலிப்ஸ் பல்டியஸ்

2. கி.பி. 11 ஆம் 12 ஆம் நூற்றாண்டு கால இலங்கையின் வரலாற்றினை அறிய உதவும் பனாகடுவ செப்பு சாசனத்துடன் தொடர்புடைய மன்னன்.
   1. 1ம் விஜயபாகு 2. 1ம் பராக்கிரமபாகு 3. நிசங்கமல்லன் 4. வசபன்

3. கி. பி. 5ம் நூற்றாண்டில் இலங்கைக்கு வருகை தந்து அபயகிரி விகாரையில் தங்கியிருந்த சீனப் பிக்கு.
   1. ஹியுங்சாங் பிக்கு 2. பாஹியன் தேரர் 3. மகாநாமதேரர் 4. ரிபைரோ

4. கற்கால மனிதன் உப்பு பயன்படுத்தியமைக்கான சான்றாக அமைவது பின்வருவனவற்றுள்.
   1. பெலிலென குகையில் கண்டெடுக்கப்பட்ட காட்டுப்பலா விதைகள்.
   2. கரையோர வெட்டவெளிகளில் கண்டெடுக்கப்பட்ட உப்பளங்கள்.
   3. இரணைமடுப் படிவுகளிலுள்ள உப்புப் பளிங்குகள்.
   4. பெலிலென குகையிலுள்ள நத்தை ஓடுகள்.

5. கி.மு 250ம் ஆண்டளவில் எழுதப்பட்ட பிராமிக் கல்வெட்டொன்றில் காணப்படும் புரகமத்த எனும் பதவிப் பெயரால் குறிப்பிடப்படுபவர்.
   1. வாஸ்துக்கலைஞர் 2. நகரபொறுப்பாளர் 3. நடனக்கலைஞர் 4. நகரகுத்திக

6. குருவிட்ட பட்டதொம்பலன குகையில் கண்டெடுக்கப்பட்ட கற்கால மரணச்சடங்குக்கான ஆதாரம்.
   1. துளையிடப்பட்ட மண்டையோடு 2. நிறம் தீட்டப்பட்ட எலும்புக்கூடுகள்
   3. வளைத்துப் புதைக்கப்பட்ட எலும்புக்கூடுகள் 4. கற்களால் செப்பனிட்ட மண்டையோடு

7. நிரல் I இல் மன்னர்களினால் ஆற்றப்பட்ட பல்வேறு பணிகளும் நிரல் II இல் அம் மன்னர்களும் தரப்பட்டுள்ளனர். நிரல் I உடன் நிரல் II ஐப் பொருத்தும் போது கிடைக்கும் சரியான விடையினைத் தெரிவு செய்க.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. நகர குத்திக என்ற அலுவலகரை நியமித்தமை. | A. துட்டகைமுனு |
| 2. மகிந்ததேரர் மூலம் பௌத்த சமயம் அறிமுகம். | B. பண்டுகாபயன் |
| 3. நிர்வாக மாவட்டங்களைப் பிரித்தமை. | C. தேவநம்பியதீசன் |
| 4. பருமகர்களின் ஒத்துழைப்புகளைப் பெற்றமை. | D. வசபன் |

   1. CDAB 2. BADC 3. DBCA 4. BCDA

8. கல்வெட்டுக்களில் தன்னை “சக்கரவர்த்தி” என குறிப்பிட்டுள்ள மன்னன்.
   1. மகா பராக்கிரமபாகு 2. நிஸங்கமல்லன் 3. மகாசேனன் 4. தாதுசேனன்

9. திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற இந்துக் கோவில்களுக்கருகே இருந்த துறைமுகங்கள் முறையே.
   1. மகாதித்த, கலாதித்த 2. கிம்ஹதித்த, நில்வளதித்த
   3. சுக்ரதித்த, கிம்ஹதித்த 4. மகாதித்த, கோகண்ணதித்த

10. புராதன இலங்கையில் இரும்புத்தாதிலிருந்து இரும்பைப் பிரித்தெடுப்பதற்கான தொழில்நுட்பத்திற்குச் சான்றாக விளங்குகின்ற இரும்பை உருக்கும் சூளை கண்டறியப்பட்ட இடம்.
1. சமனலவெவ 2. பெரகல 3. ஹல்துமுல்ல 4. உடரஞ்சாமடம்

11. சமுதாய நீதியை பாதுகாக்க நடைமுறைப் படுத்தப்பட்ட சட்டங்களை மீறுவோருக்கு தண்டனை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட நீதிமன்றத் தொகுதிகள் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு.
1. பதுளைத் தூண் கல்வெட்டு 2. சிந்துல்பவ்வ கல்வெட்டு
3. தோணிகல கல்வெட்டு 4. வேவல்கெட்டிய தூண் கல்வெட்டு

12. 1630 ஆம் ஆண்டு ரந்தெனிவெலவில் போர்த்துக்கேயருடனான போரின் போது கண்டியப் படைகள் வெற்றிபெற்றன. அப்போது கண்டியை ஆட்சி செய்த மன்னன்.
1. 1ம் விமலதர்மசூரியன் 2. 2ம் விமலதர்மசூரியன் 3. செனரத் 4. 2ம் இராஜசிங்கன்

- கீழே A,B,C,D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்திற் கொண்டு 13ம் தொடக்கம் 14ம் வினாக்களுக்கு விடையளிக்குக.

A - யாப்பகூவ B - மினிப்பே C - கோவிந்தமலை
D - தம்பதெனியா E - குருநாகல்

13. கி.பி 1232 ஆண்டு தம்பதெனியாவைத் தலைநகரமாக 3ம் விஜயபாகு தெரிவு செய்யும் வரை சுப தளபதியால் உருவாக்கப்பட்ட பாதுகாப்பு அரணைக் குறிக்கும் எழுத்து.
1. A 2. B 3. E 4. C

14. புவனேகபாகு ஆதிபாத , சங்க தளபதி ஆகியோரால் உருவாக்கப்பட்ட பாதுகாப்பு அரண்களைக் குறிக்கும் விடை
1. A,D 2. C,B 3. E,B 4. C, D

15. நிரல் - I இல் பல்வேறுபட்ட நபர்களுக்கு மூலாதாரங்களில் வழங்கப்பட்டுள்ள பெயர்கள் தரப்பட்டுள்ளன. நிரல் - II இல் அவ்வாறான நபர்கள் தரப்பட்டுள்ளனர். எனவே நிரல் I உடன் நிரல் II ஐப் பொருத்தும் போது கிடைக்கும் சரியான விடையாக அமைவது.

| "அ" | "ஆ" |
|---|---|
| 1. மஹலேகம் | A. அரசஅதிகாரிகள் |
| 2. ரத்கொல் சம்தரு | B. கூலி அடிமைகள் |
| 3. தனகீத்ததாச | C. மெய்க்காப்பாளர்கள் |
| 4. தண்டநாயக்க | D. பதிவாளர் நாயகம் |

1. DBCA 2. ACDB 3. DABC 4. CADB

16. வசப மன்னன் முதற்தடவையாக பதினொரு பாரிய குளங்களை அமைக்கத் தூண்டிய நிகழ்வாக அமைவது.
1. இலம்பகர்ண வம்சத்தவர்களின் பெருமையை நிலைநாட்ட விரும்பியமை.
2. இந்தியாவின் கிருஸ்ணா நதிக்கரைகளில் ஏற்பட்ட பஞ்சம்.
3. அதிக குளங்களை அமைத்து மக்கள் மனதில் இடம்பிடிக்க விரும்பியமை.
4. நெல் உற்பத்தியில் தன்னிறைவடைய விரும்பியமை.

17. போர்த்துகேயரின் இலங்கை வருகையின் போது யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த மன்னன்.
1. ஆரிய சக்கரவர்த்தி 2. புவிராச பண்டாரம் 3. பரராசசேகரம் 4. 1ம் சங்கிலி

18. கண்டி இராச்சியத்தில் புனித தந்ததாதுவிற்குப் பொறுப்பான அதிகாரியாக செயற்பட்டவர்.
1. கஜநாயக்க நிலமே 2. சலுவடன நிலமே 3. பத்வடன நிலமே 4. தியவடன நிலமே

19. பின்வரும் A,B,C,D என தரப்பட்டுள்ள கூற்றுக்களில் முதலாம் விமலதர்ம சூரியன் பற்றிய சரியான கூற்றுக்கள் உள்ளடங்கிய விடையை தெரிவு செய்க.
A. புதிய அரச பரம்பரையை தோற்றுவித்தமை.
B. சீயம் நாட்டிலிருந்து பிக்குகளை வரவழைத்து உபசம்பதா சடங்கு நடாத்தல்.
C. போர்த்துக்கேயரை வெளியேற்ற ஒல்லாந்தரை வரவழைத்தல்.
D. கி.பி 1602 இல் ஸ்பில்பேர்ஜன் எனும் ஒல்லாந்த தூதுவன் கண்டியில் மன்னனை சந்தித்தல்.
1. A யும் B யும் 2. A யும் D யும் 3. C யும் D யும் 4. B யும் C யும்

20. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் காலத்தில் கண்டி இராச்சியத்தின் மீது படையெடுத்து கி.பி 1815ல் கண்டியைக் கைப்பற்றிய பிரித்தானிய ஆளுநர்.
1. றொபட் பிறௌன்றிக் 2. தோமஸ் மெயிட்லன்ட் 3. ஜோன் டொயிலி 4. பிரட்றிக் நோர்த்

21. பின்வரும் வரலாற்று நிகழ்வுகளை கால ஒழுங்கில் ஒழுங்குபடுத்தும் போது வரும் சரியான விடையாக அமைவது.
A. கண்டி உள்ளிட்ட முழு இலங்கையும் கைப்பற்றப்படல்.
B. கரையோரம் முடிக்குரிய நாடாக்கப்படல்.
C. தெங்குக் கிளர்ச்சி ஏற்படல்.
D. முதலாவது சுதந்திரப் போராட்டம் ஏற்படல்.
1. BCAD 2. ADCB 3. CBAD 4. BDAC

- பின்வரும் கூற்றுக்களை அவதானித்து 31, 32 வினாக்களுக்கு விடை அளிக்குக.
A. சைவபிரகாச வித்தியாசாலை ஆரம்பித்தல்
B. பஞ்சமகா விவாதங்கள் நடாத்த முன்னிற்றல்.
C. பௌத்த பிரம்மஞான சங்கம் ஆரம்பித்தல்.
D. வண்ணார் பண்ணையில் அச்சகம் நிறுவுதல்.
E. உதயபானு பத்திரிகையை ஆரம்பித்தல்.

22. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருடன் தொடர்புடைய சமயப் பணிகளைக் கொண்ட விடைத்தொகுதி.
1. ADE 2. CFH 3.BEH 4.ABD

23. மீகெட்டுவத்தே குணானந்த தேரருடன் தொடர்புடைய விடை.
1. B 2. C 3.D 4. A

24. 1818, 1848 ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்ற சுதந்திரப் போராட்டங்களுக்கு கிட்டிய அல்லது அண்மித்த காரணங்களாக அமைந்தவற்றைக் குறிக்கும் விடை.
1. மலைநாட்டுப் பிரதானிகளுக்கு ஏற்பட்ட தாக்கமும், கிராமசபைகள் செயலற்றுப் போனமையும்.
2. சுதந்திரத்தை இழந்தமையும் அரசன் இல்லாமை பற்றிய மனவேதனையும், அரசின் புதிய வரிக்கொள்கையும்.
3. ஹஜ்ஜி மரிக்கார் என்ற முஸ்லிம் மடிகே முகாந்திரம் பதவிக்கு நியமித்தமையும், கிராமசபைகள் செயலற்றுப் போனமையும்.
4. ஹஜ்ஜி மரிக்கார் என்ற முஸ்லிம் மடிகே முகாந்திரம் பதவிக்கு நியமித்தமையும், ஆளுநர் டொரிங்டனின் புதிய வரிக்கொள்கையும்.

- பின்வரும் A தொடக்கம் E வரையிலான தகவல்களின் அடிப்படையில் 25 ஆம் 26ஆம் வினாக்களுக்கு விடை தருக.
A – கட்டாய இராஜகாரிய முறை ஒழிக்கப்பட்டமை.
B – அரசுக்கழகம் உருவாக்கப்பட்டமை.
C – ஆளுநர் நாயகம் பதவி உருவாக்கப்பட்டமை.
D – சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டமை.
E – அரசின் வர்த்தக ஏகபோக உரிமை அகற்றப்பட்டமை.

25. கோல்புறூக் அரசியல் யாப்பு மற்றும் சோல்பரி அரசியல் யாப்பு என்பன தொடர்பான தகவல்களை முறையே உள்ளடக்கிய விடை.
1. A உம் Cஉம் 2. A உம் B உம் 3. E உம் B உம் 4. Dஉம் C உம்

26. 1931 டொனமூர் அரசியல் யாப்பில் குறிப்பிடப்படும் தகவல்களைக் காட்டும் விடை எது.
1 Bஉம் E உம் 2. B உம் Cஉம் 3. D உம் E உம் 4. B உம் D உம்

27. தேயிலை, தெங்கு, இறப்பர் பயிர்களுக்கான ஆராய்ச்சி நிலயங்களை ஒழுங்கு முறையில் குறிப்பிடும் விடை.
1. அகலவத்த, மாத்தளை, தலவாக்கலை
2. மாத்தளை, தலவாக்கலை, லுனுவில.
3. தலவாக்கலை, லுனுவில, அகலவத்த
4. தலவாக்கலை, அகலவத்த, லுனுவில

28. பின்வருவனவற்றுள் பிரித்தானியர் ஆட்சி காரணமாக ஏற்பட்ட அனுகூலமான விளைவு அல்லாதது.
1. பாராளுமன்ற ஆட்சி முறை அறிமுகம் செய்யப்பட்டமை.
2. மதுபான பாவனை நாடெங்கிலும் பரவியமை.
3. ஏற்றுமதிக்கான பெருந்தோட்டப் பயிர்கள் அறிமுகம் செய்யப்பட்டமை.
4. ஆங்கில மொழியறிவு நாட்டினுள் பரவியமை.

29. சுவீடன் அரசாங்கத்தின் உதவியுடன் இலங்கையில் அமைக்கப்பட்ட நீர்த்தேக்கத் திட்டம்.
1. கொத்மலை நீர்த்தேக்கம்
2. விக்டோரியா நீர்த்தேக்கம்
3. ரந்தெனிவெல நீர்த்தேக்கம்
4. போவதென்ன நீர்த்தேக்கம்

30. இலங்கைக்குச் சுதந்திரம் வழங்குதலுடன் தொடர்புடைய அரசியல் யாப்பு சீர்திருத்தமாக காணப்படுவது.
1. டொனமூர் அரசியல் யாப்பு
2. சோல்பரி அரசியல் யாப்பு
3. 1ம் குடியரசு யாப்பு
4. 1978 அரசியல் யாப்புச் சீர்திருத்தம்

31. இலங்கை தேசிய சங்கத்தில் முதலாவது தலைவராக பதவி வகித்தவர்.
1. சேர்.டீ.பி.ஜயதிலக்க
2. சேர். பொன்னம்பலம் அருணாச்சலம்
3. சேர். பொன்னம்பலம் இராமநாதன்
4. எப்.ஆர்.சேனநாயக்கா

- மேல்வரும் அட்டவணையில் A தொடக்கம் J வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 32 ஆம் 33 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

| நாடு | பயணி | கண்டறிந்த இடம் |
|---|---|---|
| A – ஸ்பானியா | D – கபொட் சகோதரர்கள் | G – மேற்கிந்திய தீவுகள் |
| B – போர்த்துக்கல் | E – கிறிஸ்டோபர் கொலம்பஸ் | H – இந்தியா |
| C – பிரான்ஸ் | F – வாஸ்கொடகாமா | I – கனடா |

32. போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த நாடுகாண் பயணியையும் அவர் கண்டறிந்த நாட்டினையும் குறிக்கும் எழுத்துக்களைத் தெரிவு செய்க.
1. F, H  2. E, G  3. D, I  4. F, G

33. கிறிஸ்டோபர் கொலம்பஸின் தாய் நாட்டினையும் அவர் கண்டறிந்த நாட்டினையும் தரும் விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.
1. A, H  2. A, G  3. C, I  4. B, G

34. கைத்தொழில் புரட்சி காரணமாக ஏற்பட்ட அரசியல் மாற்றங்களில் ஒன்றாக காணப்படுவது.
1. அரசியல் கொள்கைகள் தோற்றம் பெறல்.
2. வர்த்தகக் கம்பனிகள் உருவாக்கம்
3. பாரிய நகரங்கள் தோற்றம்
4. சூழல் மாசடைதல்

35. கைத்தொழில் புரட்சியினால் பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட மாற்றங்களைத் தரும் விடையாக அமைவது.
1. சேரிப்புறங்கள் உருவாகியமை
2. சூழல் மாசடைந்தமை
3. தன்னிறைவுப் பொருளாதார முறை வீழ்ச்சியடைந்து சம்பளத்திற்கு வேலை செய்யும் தொழிலாளர் வகுப்பு ஒன்று தோற்றம் பெற்றது.
4. குடும்பங்களில் மதுபாவனையின் பயன்பாடு, தவறான செயல்களில் ஈடுபடுதல் நெறிபிறழ்ந்த வாழ்க்கைமுறை ஏற்பட்டது.

- கீழே A,B,C,D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்திற் கொண்டு 36 தொடக்கம் 38 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

A – 1. 2ம் உலகமகாயுத்தம் - 2. ஐக்கிய நாடுகள் சபை
B – 1. அமெரிக்கப் புரட்சி - 2. பொஸ்டன் தேநீர் விருந்து
C – 1. பிரான்சியப் புரட்சி - 2. உணவு, நிலம், சகோதரத்துவம்
D – 1. வி.ஜெ.லெனின் - 2. ரஷ்யப் புரட்சி

36. முதலாவது நிகழ்வினால் இரண்டாவது உருவாகக் காரணமாக இருந்த விடயங்களைத் தரும் கருத்துச் சோடி
1. B  2. A  3. D  4. C

37. இரண்டாவது நிகழ்வு முதலாவது ஏற்படுதவற்குக் காரணமாக அமைந்தது இதனைத் தரும் கருத்துச் சோடி.
1. B  2. A  3. D  4. C

38. முதலாவதற்கும் இரண்டாவதற்கும் எவ்வித தொடர்பினையும் தராத கருத்துச் சோடி.
1. B  2. A  3. D  4. C

39. அடோல்ப் ஹிட்லரின் இராணுவம், இரகசியப் பொலிஸ் பிரிவு என்பவற்றைத் முறையே தரும் விடையாக அமைவது.
1. எஸ். எஸ் இராணுவம், கெஸ்டாபோ பொலிஸ்
2. ஆர். எஸ் இராணுவம், நாசி பொலிஸ்
3. கருஞ்சட்டை இராணுவம், எஸ். எஸ் பொலிஸ்
4. செம்படை இராணுவம், கருஞ்சட்டை பொலிஸ்

40. ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச நீதிமன்றம் அமைந்துள்ள நாட்டினையும், நகரத்தினையும் தரும் விடையாக அமைவது.
1. பிரித்தானியா – லண்டன்
2. நெதர்லாந்து – ஹேக்
3. ஜேர்மனி – பேர்ளின்
4. பிரான்ஸ் - பரிஸ்

(40×2=80 புள்ளிகள்)

மாகாணக் கல்வித் திணைக்களம் - கிழக்கு மாகாணம்
Provincial Department of Education, Eastern Province

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர) முன்னோடி கணிப்பீடு, 2023(2024)
General Certificate of Education (Ordinary Level) Pilot Assessment, 2023(2024)

வரலாறு - I
History - I

33 T I

ஒரு மணித்தியாலம்
One Hour

கவனிக்க :

- இவ்வினாப்பத்திரம் 40 வினாக்களைக் கொண்டது.
- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளுள் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

சுட்டெண் : ..............................

புள்ளிகள்

## பகுதி - I

1. நெச்சுரலிஸ் ஹிஸ்டோரியா ( இயற்கை வரலாறு) என்னும் நூலின் ஆசிரியர்.
   1. பாகியன் தேரர் 2. இபின் பதூதா 3. பிளினி 4. பிலிப்ஸ் பல்டியஸ்

2. கி.பி. 11 ஆம் 12 ஆம் நூற்றாண்டு கால இலங்கையின் வரலாற்றினை அறிய உதவும் பனாகடுவ செப்பு சாசனத்துடன் தொடர்புடைய மன்னன்.
   1. 1ம் விஜயபாகு 2. 1ம் பராக்கிரமபாகு 3. நிசங்கமல்லன் 4. வசபன்

3. கி. பி. 5ம் நூற்றாண்டில் இலங்கைக்கு வருகை தந்து அபயகிரி விகாரையில் தங்கியிருந்தசீனப் பிக்கு.
   1. ஹியுங்சாங் பிக்கு 2. பாஹியன் தேரர் 3. மகாநாமதேரர் 4. ரிபைரோ

4. கற்கால மனிதன் உப்பு பயன்படுத்தியமைக்கான சான்றாக அமைவது பின்வருவனவற்றுள்.
   1. பெலிலென குகையில் கண்டெடுக்கப்பட்ட காட்டுப்பலா விதைகள்.
   2. கடலோர வெட்டவெளிகளில் கண்டெடுக்கப்பட்ட உப்பளங்கள்.
   3. இரணைமடுப் படிவுகளிலுள்ள உப்புப் பளிங்குகள்.
   4. பெலிலென குகையிலுள்ள நத்தை ஓடுகள்.

5. கி.மு 250ம் ஆண்டளவில் எழுதப்பட்ட பிராமிக் கல்வெட்டொன்றில் காணப்படும் புரகமத்த எனும் பதவிப் பெயரால் குறிப்பிடப்படுபவர்.
   1. வாஸ்துக்கலைஞர் 2. நகரபொறுப்பாளர் 3. நடனக்கலைஞர் 4. நகரகுத்திக

6. குருவிட்ட பட்டதொம்பலன குகையில் கண்டெடுக்கப்பட்ட கற்கால மரணச்சடங்குக்கான ஆதாரம்.
   1. துளையிடப்பட்ட மண்டையோடு 2. நிறம் தீட்டப்பட்ட எலும்புக்கூடுகள்
   3. வளைத்துப் புதைக்கப்பட்ட எலும்புக்கூடுகள் 4. கற்களால் செப்பனிட்ட மண்டையோடு

7. நிரல் I இல் மன்னர்களினால் ஆற்றப்பட்ட பல்வேறு பணிகளும் நிரல் II இல் அம் மன்னர்களும் தரப்பட்டுள்ளனர். நிரல் I உடன் நிரல் II ஐப் பொருத்தும் போது கிடைக்கும் சரியான விடையினைத் தெரிவு செய்க.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. நகர குத்திக என்ற அலுவலகரை நியமித்தமை. | A. துட்டகைமுனு |
| 2. மகிந்ததேரர் மூலம் பௌத்த சமயம் அறிமுகம். | B. பண்டுகாபயன் |
| 3. நிர்வாக மாவட்டங்களைப் பிரித்தமை. | C. தேவநம்பியதீசன் |
| 4. பருமகர்களின் ஒத்துழைப்புகளைப் பெற்றமை. | D. வசபன் |

   1. CDAB 2. BADC 3. DBCA 4. BCDA

8. கல்வெட்டுக்களில் தன்னை “சக்கரவர்த்தி” என குறிப்பிட்டுள்ள மன்னன்.
   1. மகா பராக்கிரமபாகு 2. நிஸங்கமல்லன் 3. மகாசேனன் 4. தாதுசேனன்

9. திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற இந்துக் கோவில்களுக்கருகே இருந்த துறைமுகங்கள் முறையே.
   1. மகாதித்த, கலாதித்த 2. கிம்ஹதித்த, நில்வளதித்த
   3. சுக்ரதித்த, கிம்ஹதித்த 4. மகாதித்த, கோகண்ணதித்த

10. புராதன இலங்கையில் இரும்புத்தாதிலிருந்து இரும்பைப் பிரித்தெடுப்பதற்கான தொழில்நுட்பத்திற்குச் சான்றாக விளங்குகின்ற இரும்பை உருக்கும் சூளை கண்டறியப்பட்ட இடம்.
1. சமனலவெவ 2. பெரகல 3. ஹல்துமுல்ல 4. உடரஞ்சாமடம்

11. சமுதாய நீதியை பாதுகாக்க நடைமுறைப் படுத்தப்பட்ட சட்டங்களை மீறுவோருக்கு தண்டனை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட நீதிமன்றத் தொகுதிகள் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு.
1. பதுளைத் தூண் கல்வெட்டு 2. சிந்துல்பவ்வ கல்வெட்டு
3. தோணிகல கல்வெட்டு 4. வேவல்கெட்டிய தூண் கல்வெட்டு

12. 1630 ஆம் ஆண்டு ரந்தெனிவெலவில் போர்த்துக்கேயருடனான போரின் போது கண்டியப் படைகள் வெற்றிபெற்றன. அப்போது கண்டியை ஆட்சி செய்த மன்னன்.
1. 1ம் விமலதர்மசூரியன் 2. 2ம் விமலதர்மசூரியன் 3. செனரத் 4. 2ம் இராஜசிங்கன்

- கீழே A,B,C,D ஆகியவற்றில் தரப்பட்டள்ள விடயங்களைக் கவனத்திற் கொண்டு 13ம் தொடக்கம் 14ம் வினாக்களுக்கு விடையளிக்குக.

A - யாப்பகூவ B - மினிப்பே C - கோவிந்தமலை
D - தம்பதெனியா E - குருநாகல்

13. கி.பி 1232 ஆண்டு தம்பதெனியாவைத் தலைநகரமாக 3ம் விஜயபாகு தெரிவு செய்யும் வரை சுப தளபதியால் உருவாக்கப்பட்ட பாதுகாப்பு அரணைக் குறிக்கும் எழுத்து.
1. A 2. B 3. E 4. C

14. புவனேகபாகு ஆதிபாத , சங்க தளபதி ஆகியோரால் உருவாக்கப்பட்ட பாதுகாப்பு அரண்களைக் குறிக்கும் விடை
1. A,D 2. C,B 3. E,B 4. C, D

15. நிரல் - I இல் பல்வேறுபட்ட நபர்களுக்கு மூலாதாரங்களில் வழங்கப்பட்டுள்ள பெயர்கள் தரப்பட்டுள்ளன. நிரல் - II இல் அவ்வாறான நபர்கள் தரப்பட்டுள்ளனர். எனவே நிரல் I உடன் நிரல் II ஐப் பொருத்தும் போது கிடைக்கும் சரியான விடையாக அமைவது.

| "அ" | "ஆ" |
|---|---|
| 1. மஹாலேகம் | A. அரசஅதிகாரிகள் |
| 2. ரத்கொல் சம்தரு | B. கூலி அடிமைகள் |
| 3. தனகீத்ததாச | C. மெய்க்காப்பாளர்கள் |
| 4. தண்டநாயக்க | D. பதிவாளர் நாயகம் |

1. DBCA 2. ACDB 3. DABC 4. CADB

16. வசப மன்னன் முதற்தடவையாக பதினொரு பாரிய குளங்களை அமைக்கத் தூண்டிய நிகழ்வாக அமைவது.
1. இலம்பகர்ண வம்சத்தவர்களின் பெருமையை நிலைநாட்ட விரும்பியமை.
2. இந்தியாவின் கிருஸ்ணா நதிக்கரைகளில் ஏற்பட்ட பஞ்சம்.
3. அதிக குளங்களை அமைத்து மக்கள் மனதில் இடம்பிடிக்க விரும்பியமை.
4. நெல் உற்பத்தியில் தன்னிறைவடைய விரும்பியமை.

17. போர்த்துகேயரின் இலங்கை வருகையின் போது யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த மன்னன்.
1. ஆரிய சக்கரவர்த்தி 2. புவிராச பண்டாரம் 3. பரராசசேகரம் 4. 1ம் சங்கிலி

18. கண்டி இராச்சியத்தில் புனித தந்ததாதுவிற்குப் பொறுப்பான அதிகாரியாக செயற்பட்டவர்.
1. கஜநாயக்க நிலமே 2. சலுவடன நிலமே 3. பத்வடன நிலமே 4. தியவடன நிலமே

19. பின்வரும் A,B,C,D என தரப்பட்டுள்ள கூற்றுக்களில் முதலாம் விமலதர்ம சூரியன் பற்றிய சரியான கூற்றுக்கள் உள்ளடங்கிய விடையை தெரிவு செய்க.
A. புதிய அரச பரம்பரையை தோற்றுவித்தமை.
B. சீயம் நாட்டிலிருந்து பிக்குகளை வரவழைத்து உபசம்பதா சடங்கு நடாத்தல்.
C. போர்த்துக்கேயரை வெளியேற்ற ஒல்லாந்தரை வரவழைத்தல்.
D. கி.பி 1602 இல் ஸ்பில்பேர்ஜன் எனும் ஒல்லாந்த தூதுவன் கண்டியில் மன்னனை சந்தித்தல்.
1. A யும் B யும் 2. A யும் D யும் 3. C யும் D யும் 4. B யும் C யும்

20. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் காலத்தில் கண்டி இராச்சியத்தின் மீது படையெடுத்து கி.பி 1815ல் கண்டியைக் கைப்பற்றிய பிரித்தானிய ஆளுநர்.
1. றொபட் பிறௌன்றிக் 2. தோமஸ் மெயிட்லன்ட் 3. ஜோன் டொயிலி 4. பிரட்றிக் நோர்த்

21. பின்வரும் வரலாற்று நிகழ்வுகளை கால ஒழுங்கில் ஒழுங்குபடுத்தும் போது வரும் சரியான விடையாக அமைவது.
A. கண்டி உள்ளிட்ட முழு இலங்கையும் கைப்பற்றப்படல்.
B. கரையோரம் முடிக்குரிய நாடாக்கப்படல்.
C. தெங்குக் கிளர்ச்சி ஏற்படல்.
D. முதலாவது சுதந்திரப் போராட்டம் ஏற்படல்.
1. BCAD 2. ADCB 3. CBAD 4. BDAC

- பின்வரும் கூற்றுக்களை அவதானித்து 31, 32 வினாக்களுக்கு விடை அளிக்குக.
A. சைவபிரகாச வித்தியாசாலை ஆரம்பித்தல்
B. பஞ்சமகா விவாதங்கள் நடாத்த முன்னிற்றல்.
C. பௌத்த பிரம்மஞான சங்கம் ஆரம்பித்தல்.
D. வண்ணார் பண்ணையில் அச்சகம் நிறுவுதல்.
E. உதயபானு பத்திரிகையை ஆரம்பித்தல்.

22. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருடன் தொடர்புடைய சமயப் பணிகளைக் கொண்ட விடைத்தொகுதி.
1. ADE 2. CFH 3.BEH 4.ABD

23. மீகெட்டுவத்தே குணானந்த தேரருடன் தொடர்புடைய விடை.
1. B 2. C 3.D 4. A

24. 1818, 1848 ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்ற சுதந்திரப் போராட்டங்களுக்கு கிட்டிய அல்லது அண்மித்த காரணங்களாக அமைந்தவற்றைக் குறிக்கும் விடை.
1. மலைநாட்டுப் பிரதானிகளுக்கு ஏற்பட்ட தாக்கமும், கிராமசபைகள் செயலற்றுப் போனமையும்.
2. சுதந்திரத்தை இழந்தமையும் அரசன் இல்லாமை பற்றிய மனவேதனையும், அரசின் புதிய வரிக்கொள்கையும்.
3. ஹஜ்ஜி மரிக்கார் என்ற முஸ்லிம் மடிகே முகாந்திரம் பதவிக்கு நியமித்தமையும், கிராமசபைகள் செயலற்றுப் போனமையும்.
4. ஹஜ்ஜி மரிக்கார் என்ற முஸ்லிம் மடிகே முகாந்திரம் பதவிக்கு நியமித்தமையும், ஆளுநர் டொரிங்டனின் புதிய வரிக்கொள்கையும்.

- பின்வரும் A தொடக்கம் E வரையிலான தகவல்களின் அடிப்படையில் 25 ஆம் 26ஆம் வினாக்களுக்கு விடை தருக.
A – கட்டாய இராஜகாரிய முறை ஒழிக்கப்பட்டமை.
B – அரசுக்கழகம் உருவாக்கப்பட்டமை.
C – ஆளுநர் நாயகம் பதவி உருவாக்கப்பட்டமை.
D – சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டமை.
E – அரசின் வர்த்தக ஏகபோக உரிமை அகற்றப்பட்டமை.

25. கோல்புறூக் அரசியல் யாப்பு மற்றும் சோல்பரி அரசியல் யாப்பு என்பன தொடர்பான தகவல்களை முறையே உள்ளடக்கிய விடை.
1. A உம் Cஉம் 2. A உம் B உம் 3. E உம் B உம் 4. Dஉம் C உம்

26. 1931 டொனமூர் அரசியல் யாப்பில் குறிப்பிடப்படும் தகவல்களைக் காட்டும் விடை எது.
1 Bஉம் E உம் 2. B உம் Cஉம் 3. D உம் E உம் 4. B உம் D உம்

27. தேயிலை, தெங்கு, இறப்பர் பயிர்களுக்கான ஆராய்ச்சி நிலயங்களை ஒழுங்கு முறையில் குறிப்பிடும் விடை.
1. அகலவத்த, மாத்தளை, தலவாக்கலை
2. மாத்தளை, தலவாக்கலை, லுணுவில.
3. தலவாக்கலை, லுணுவில, அகலவத்த
4. தலவாக்கலை, அகலவத்த, லுணுவில

28. பின்வருவனவற்றுள் பிரித்தானியர் ஆட்சி காரணமாக ஏற்பட்ட அனுகூலமான விளைவு அல்லாதது.
1. பாராளுமன்ற ஆட்சி முறை அறிமுகம் செய்யப்பட்டமை.
2. மதுபான பாவனை நாடெங்கிலும் பரவியமை.
3. ஏற்றுமதிக்கான பெருந்தோட்டப் பயிர்கள் அறிமுகம் செய்யப்பட்டமை.
4. ஆங்கில மொழியறிவு நாட்டினுள் பரவியமை.

29. சுவீடன் அரசாங்கத்தின் உதவியுடன் இலங்கையில் அமைக்கப்பட்ட நீர்த்தேக்கத் திட்டம்.
1. கொத்மலை நீர்த்தேக்கம்
2. விக்டோரியா நீர்த்தேக்கம்
3. ரந்தெனிவெல நீர்த்தேக்கம்
4. போவதென்ன நீர்த்தேக்கம்

30. இலங்கைக்குச் சுதந்திரம் வழங்குதலுடன் தொடர்புடைய அரசியல் யாப்பு சீர்திருத்தமாக காணப்படுவது.
1. டொனமூர் அரசியல் யாப்பு
2. சோல்பரி அரசியல் யாப்பு
3. 1ம் குடியரசு யாப்பு
4. 1978 அரசியல் யாப்புச் சீர்திருத்தம்

31. இலங்கை தேசிய சங்கத்தில் முதலாவது தலைவராக பதவி வகித்தவர்.
1. சேர்.டீ.பி.ஜயதிலக்க
2. சேர். பொன்னம்பலம் அருணாச்சலம்
3. சேர். பொன்னம்பலம் இராமநாதன்
4. எப்.ஆர்.சேனநாயக்கா

- மேல்வரும் அட்டவணையில் A தொடக்கம் J வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 32 ஆம் 33 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

| நாடு | பயணி | கண்டறிந்த இடம் |
|---|---|---|
| A – ஸ்பானியா | D – கபொட் சகோதரர்கள் | G – மேற்கிந்திய தீவுகள் |
| B – போர்த்துக்கல் | E – கிறிஸ்டோபர் கொலம்பஸ் | H – இந்தியா |
| C – பிரான்ஸ் | F – வாஸ்கொடகாமா | I – கனடா |

32. போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த நாடுகாண் பயணியையும் அவர் கண்டறிந்த நாட்டினையும் குறிக்கும் எழுத்துக்களைத் தெரிவு செய்க.
1. F, H
2. E, G
3. D, I
4. F, G

33. கிறிஸ்டோபர் கொலம்பஸின் தாய் நாட்டினையும் அவர் கண்டறிந்த நாட்டினையும் தரும் விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.
1. A, H
2. A, G
3. C, I
4. B, G

34. கைத்தொழில் புரட்சி காரணமாக ஏற்பட்ட அரசியல் மாற்றங்களில் ஒன்றாக காணப்படுவது.
1. அரசியல் கொள்கைகள் தோற்றம் பெறல்.
2. வர்த்தகக் கம்பனிகள் உருவாக்கம்
3. பாரிய நகரங்கள் தோற்றம்
4. சூழல் மாசடைதல்

35. கைத்தொழில் புரட்சியினால் பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட மாற்றங்களைத் தரும் விடையாக அமைவது.
1. சேரிப்புறங்கள் உருவாகியமை
2. சூழல் மாசடைந்தமை
3. தன்னிறைவுப் பொருளாதார முறை வீழ்ச்சியடைந்து சம்பளத்திற்கு வேலை செய்யும் தொழிலாளர் வகுப்பு ஒன்று தோற்றம் பெற்றது.
4. குடும்பங்களில் மதுபாவனையின் பயன்பாடு, தவறான செயல்களில் ஈடுபடுதல் நெறிபிறழ்ந்த வாழ்க்கைமுறை ஏற்பட்டது.

- கீழே A,B,C,D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்திற் கொண்டு 36 தொடக்கம் 38 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

A – 1. 2ம் உலகமகாயுத்தம் - 2. ஐக்கிய நாடுகள் சபை
B – 1. அமெரிக்கப் புரட்சி - 2. பொஸ்டன் தேநீர் விருந்து
C – 1. பிரான்சியப் புரட்சி - 2. உணவு, நிலம், சகோதரத்துவம்
D – 1. வி.ஜெ.லெனின் - 2. ரஷ்யப் புரட்சி

36. முதலாவது நிகழ்வினால் இரண்டாவது உருவாகக் காரணமாக இருந்த விடயங்களைத் தரும் கருத்துச் சோடி
1. B
2. A
3. D
4. C

37. இரண்டாவது நிகழ்வு முதலாவது ஏற்படுதவற்குக் காரணமாக அமைந்தது இதனைத் தரும் கருத்துச் சோடி.
1. B
2. A
3. D
4. C

38. முதலாவதற்கும் இரண்டாவதற்கும் எவ்வித தொடர்பினையும் தராத கருத்துச் சோடி.
1. B
2. A
3. D
4. C

39. அடோல்ப் ஹிட்லரின் இராணுவம், இரகசியப் பொலிஸ் பிரிவு என்பவற்றைத் முறையே தரும் விடையாக அமைவது.
1. எஸ். எஸ் இராணுவம், கெஸ்டாபோ பொலிஸ்
2. ஆர். எஸ் இராணுவம், நாசி பொலிஸ்
3. கருஞ்சட்டை இராணுவம், எஸ். எஸ் பொலிஸ்
4. செம்படை இராணுவம், கருஞ்சட்டை பொலிஸ்

40. ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச நீதிமன்றம் அமைந்துள்ள நாட்டினையும், நகரத்தினையும் தரும் விடையாக அமைவது.
1. பிரித்தானியா – லண்டன்
2. நெதர்லாந்து – ஹேக்
3. ஜேர்மனி – பேர்லின்
4. பிரான்ஸ் - பரிஸ்

(40×2=80 புள்ளிகள்)

முழுப் பதிப்புரிமையுடையது All Rights Reserved

மாகாணக் கல்வித் திணைக்களம் கிழக்கு மாகாணம்
Provincial Department of Education, Eastern Province

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) முன்னோடி கணிப்பீடு, 2023(2024)
**General Certificate of Education (Ordinary Level) Pilot Assessment, 2023(2024)**

| வரலாறு - II<br>History - II | 33 T II | மூன்று மணித்தியாலங்கள்<br>Three Hours |
|---|---|---|

மேலதிக வாசிப்பு நேரம்- 10 நிமிடங்கள்
Additional Reading Time- 10 minutes

- ❖ இவ்வினாப்பத்திரம் மூன்று பகுதிகளைக் கொண்டது.
- ❖ பகுதி I இன் முதலாம் வினா கட்டாயமானது.
- ❖ பகுதி II இலிருந்து **நான்கு** வினாக்களுக்கும் பகுதி III இலிருந்து **ஒரு** வினாவுக்கும் விடை எழுதுக.
- ❖ எல்லாமாக **ஆறு** வினாக்களுக்கு விடை எழுதுக.

சுட்டெண் : .............................

**புள்ளிகள்**

## பகுதி I

1. (அ) (i) கீழே (i) இல் குறிக்கப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும் (ii) இல் குறிக்கப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள உலகப் படத்திலும் குறித்துப் பெயரிடுக.

(i) மல்வத்து ஓயா, உருவெலகம, வல்லிபுரம், பல்லவங்க, கற்பிட்டி, கந்தளாய்க்குளம், பதுளை, நல்லூர், மல்வானை, மகியங்கனை, புலஸ்திநகரம், தெவிநுவர. (12 புள்ளிகள்)

(ii) ராமஞ்ஞதேசம், ஜேர்மன், பீஜிங், மலாக்கா நீரிணை, அலெக்ஸ்சாந்திரியா, கருங்கடல் (06 புள்ளிகள்)

(ஆ) (i) கீழ்வரும் A,B,C,D ஆகிய வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை ஒழுங்கு முறையில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A. இலங்கையில் கிடைகக்கப்பெற்ற வல்லிபுர சாசனத்துடன் தொடர்புடைய மன்னன்
B. சீதாவாக்கை வீழ்ச்சிக்கு காரணமான முதலாம் இராஜசிங்கனின் தந்தை
C. இலங்கையில் சோல்பரி அரசியல் யாப்பு யாரின் தலைமைத்துவத்தின் கீழ் வரையப்பட்டது
D. வேர்சேல்ஸ் உடன்படிக்கையுடன் தொடர்புடைய இத்தாலிய பிரதமர்

(04 புள்ளிகள்)

- A,B என குறிப்பிடப்பட்டுள்ள ஒளிப்படங்களை அவதானித்து கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு உரிய விடைகளை ஒழுங்கு முறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

(ii) 1. A இனால் காட்டப்பட்டுள்ள ஆக்கம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது
2. இவ்வாக்கத்தை உருவாக்க பயன்படுத்தப்பட்ட மூலப்பொருள்
3. இது கண்டுபிடிக்கப்பட்ட இடம்
4. இதனைப் பயன்படுத்திய ஆட்சியாளர்கள் ஆட்சி செய்த பிரதேசம்

(04 புள்ளிகள்)



உரு A

(iii) 1. படம் B யினால் காட்டப்படும் நிகழ்வு யாது?
2. இதில் சம்மந்தப்படும் இளவரசன் எந்த நாட்டைச் சேர்ந்தவன்?
3. இது எப்போருக்கு ஆரம்பமாக அமைந்தது?
4. இச்சம்பவம் நடைபெற்ற நகரம் எது?

(04 புள்ளிகள்)



உரு B

## பகுதி II

2. (i) இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதர்கள் வாழ்ந்த சுற்றாடல் வலயங்கள் மூன்றைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) A - வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதன் வாழ்ந்த தாழ்நில உலர்வலயக் குகைகள் இரண்டையும்,
B - முன்வரலாற்றுக் காலத்திற்குரியதாகக் கருதப்படும் மெகாலிதிக் மயானம் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு இடங்களையும் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iii) இலங்கையில் வாழ்ந்த வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் தொழில்நுட்ப அறிவு எவ்வாறு காணப்பட்டது என்பதை இரண்டு காரணிகளைக் கொண்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) இந் நாட்டை ஆண்ட மன்னர்களுள் முதலாம் விஜயபாகு முக்கியமான ஆட்சியாளர் என்பதை மூன்று காரணிகளை துணையாகக் கொண்டு விளக்குக. (6 புள்ளிகள்)

3. (i) பின்வரும் A,B,C யினால் காட்டப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை முறையே குறிப்பிடுக.
A - பருமக என்ற பிரதானிகளின் தோற்றத்தின் அடிப்படையான விடயமாக அமைவது.
B - ஐரோப்பியர் இந்நாட்டின் மீது செல்வாக்குச் செலுத்தும் வரை பாதுகாப்பான இலங்கையின் இறைமைக்கு அடித்தளம் இட்ட மன்னன்.
C - அரச வரி அறவிடும் முறை முறைமைப்படுத்தப்பட்டதோடு தொடர்புடைய ஆட்சியாளன். (3 புள்ளிகள்)

(ii) பின்வரும் A தொடக்கம் B வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடை தருக.
A - சொத்திசால எனப்பட்ட விசேட கட்டடங்கள் எம்மன்னன் காலத்தில் நிர்மாணிக்கப்பட்டன.
B - புராதான காலத்தில் பௌத்த குருமார்கள் ஆழ்ந்த தியானத்தில் ஈடுபடுவதற்காக பயன்படுத்தப்பட்ட கட்டடம் எவ்வாறு அழைக்கப்படும்
C - பிராந்திய ஆட்சியாளர்கள் பலருடன் சண்டையிட்டு அனுராதபுரத்தை தலைநகரமாக தெரிவு செய்த மன்னன்.
D - பன்முகப்படுத்தப்பட்டிருந்த பிராந்திய அதிகாரத்தைக் கொண்டிருந்த பருமகமாரை ஒன்று சேர்த்துக் கொண்ட மன்னன். (4 புள்ளிகள்)

(iii) புராதன கிராமத் தலைவரான கமிகவினால் ஆற்றப்பட்ட பணிகள் இரண்டை குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) நாட்டு மக்கள் அரசனிடம் இருந்து எதிர்பார்த்த சேவைகள் மூன்றினைக் குறிப்பட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

4. (i) பின்வரும் A,B, C ஆகியவற்றில் தரப்பட்டுள்ள குளங்களை அமைத்த மன்னர்களைக் குறிப்பிடுக.
A. கலாவாவி
B. பதவியாக்குளம்
C. ஹுருளு வாவி (3 புள்ளிகள்)

(ii) A. அநுராதபுரகாலத்தில் அமைக்கப்பட்ட பொய்கைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
B. அநுராதபுர காலத்தில் அமைக்கப்பட்ட விகாரைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iii) புராதன இலங்கையில் இரும்பு பிரித்தெடுக்கும் தொழில் நுட்பம் வளர்ச்சியடைந்து காணப்பட்டது என்பதனை இரு உதாரணங்கள் துணைகொண்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) பண்டைய இலங்கையில் பின்வரும் ஒவ்வொன்றும் சிறப்புற்றுக் காணப்பட்டமையை சுருக்கமாக விபரிக்குக.
A. சிகிரிய நீர்ப்பூங்கா
B. சிறு கைத்தொழில்கள்
C. உள்நாட்டு சம்பிரதாயம் (6 புள்ளிகள்)

5. (i) பின்வரும் A, B, C ஆகிய நூல்கள் எவ் இராசதானி காலத்தில் எழுதப்பட்டது என்பதை முறையே குறிப்பிடுக.
A. பன்சிய பனஸ் ஜாதகய
B. பூஜாவலிய
C. குத்தில காவியம் (3 புள்ளிகள்)

(ii) கம்பளை காலத்தில்,
A. புதிய அரச உரிமை முறை
B. காலி மும்மொழிக் கல்வெட்டை நிறுவிய தளபதி
C. அரச குடும்பத்துடன் நெருங்கிய உறவு கொண்டிருந்த மைகம பிரபுக் குடும்பம்
D. சமகாலத்தில் தெடிகம ஆட்சியாளன், என்பவற்றை முறையே குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iii) கோட்டை காலம் சிங்கள இலக்கியத்தின் பொற்காலம் என்பதனை இரண்டு சான்றுகள் மூலம் விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) இரண்டாம நகராக்க காலத்தின் போது
A. ஏனைய சமயங்கள்
B. கலைகளும், கட்டட நிர்மாணமும்
என்பன வளர்சியடைந்து காணப்பட்டது என்பதனை உதாரணங்களின் துணையுடன் விளக்குக. (6 புள்ளிகள்)

6. (i) டொனமூர் யாப்பு சீர் திருத்தத்தின் முக்கிய அம்சங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) பின்வரும் A,B,C,D ஆகியவற்றுக்கான விடைகளை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறையில் குறிப்பிடுக.
A. கோப்பிக்கான ஏற்றுமதி வரியைக் குறைத்த ஆளுநர்
B. இலங்கை தொழிலாளர் இயக்கத்தின் தந்தை
C. ஐக்கியதேசியக் கட்சியைத் தோற்றுவித்தவர்
D. இலங்கை தேசிய சங்கத்தின் முதலாவது தலைவர்
(டொரிங்டன், எஸ்.டபிள்யூ.ஆர்.டீ. பண்டாரநாயக்க , எட்வேட்பாண்ஸ், டி.எஸ். சேனநாயக்க, ஏ.ஈ.குணசிங்க, சேர்.பொன். அருணாச்சலம், சேர்.பொன்.இராமநாதன்) (4 புள்ளிகள்)

(iii) 1833 கோல்புறூக் சீர்திருத்தத்தின் மூலம் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) பிரித்தானியர் ஆட்சி காரணமாக இலங்கையில் ஏற்பட்ட விளைவுகள் மூன்றினை விளக்குக. (6 புள்ளிகள்)

7. (i) சுதந்திரத்திற்குப் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட விவசாயக் குடியேற்றத் திட்டங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் இரண்டு தருக. (4 புள்ளிகள்)

(iii) புதிய விவசாயக் குடியேற்றத் திட்டங்களை உருவாக்கும் போது எதிர்நோக்கிய சவால்கள் இரண்டினை குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) 1978 இரண்டாம் குடியரசு யாப்பின் படியான வாக்களிப்பு முறைகள் மூன்றினைச் சுருக்கமாக விபரிக்குக. (6 புள்ளிகள்)

## பகுதி III

8. (i) மறுமலர்ச்சியுடன் தொடர்புடைய பின்வரும் A,B,C யினால் குறிப்பிடப்படும் வினாக்களுக்கான விடைகளை முறையே தருக.
A - மறுமலர்ச்சிக் காலத்தில் பெரும் மாற்றத்திற்குட்படுத்தப்பட்ட துறை
B - மறுமலச்சிக்காலத்தில் நிக்கலஸ் கொப்பனிகஸ் கூறிய கருத்துக்களை உறுதி செய்த விஞ்ஞானி
C - நாடுகாண் பயணங்களுக்கு அனுசரணை வழங்கிய கடலோடி ஹென்றியின் நாடு (3 புள்ளிகள்)

(ii) மறுமலர்ச்சியுடன் தொடர்புடைய பின்வரும் A,B,C,D இனால் குறிப்பிடப்படும் கண்டுபிடிப்புக்களுடன் தொடர்புபட்டோரை முறையே குறிப்பிடுக.
A - புவியீர்ப்புக் கோட்பாடு
B - மனித உடலின் குருதிச் சுற்றோட்டம் தொடர்பான தகவல்கள்
C - அச்சு இயந்திரம்
D - தொலைநோக்கி (4 புள்ளிகள்)

(iii) மறுமலர்ச்சிக்காலத்தில் நாடுகாண் பயணங்களின் விருத்தியில் செல்வாக்குச் செலுத்திய இரு காரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) மறுமலர்ச்சியின் தாக்கத்தால் உலக அரசியல், பொருளாதார துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

9. (i) உலகில் இடம் பெற்ற புரட்சிகளுடன் தொடர்புடைய பின்வரும் ABC யினால் குறிப்பிடப்படும் வினாக்களுக்கு அதே ஒழுங்குமுறையில் விடை தருக.
A - 1607ல் பிரித்தானியரால் வட அமெரிக்காவில் உருவாக்கப்பட்ட முதலாவது குடியேற்றம்
B - பிரான்சின் முடியாட்சியின் சின்னமாகக் கருதப்படுவது
C - அமெரிக்காவில் சுங்க வரிகளை விதித்த பிரத்தானிய பிரதமர் (3 புள்ளிகள்)

(ii) பின்வரும் A,B,C,D விடயங்களுடன் தொடர்புடைய வினாக்களுக்கு பொருத்தமான விடைகளை முறையே குறிப்பிடுக.
A - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது ஜனாதிபதியாக பதவி வகித்தவர்
B - உணவு, நிலம், சமாதானம் என்னும் சுலோகத்துடன் தொடர்புடைய புரட்சி
C – 'மன்னன் மக்களின் நலன் கருத்திச் செயற்பட வேண்டும், அவ்வாறு செய்யாத ஆட்சியாளர்களை துரத்திவிட வேண்டும்' எனக் குறிப்பிடும் நூல்
D - லெனின் தலைமையிலான போல்ஷவிக் புரட்சி விவசாய தொழிலாளர் அரசாங்கத்தை அமைக்க உதவிய அமைப்பு (4 புள்ளிகள்)

(iii) பிரான்சியப் புரட்சியின் பின்னர் உலகில் பல்வேறுபட்ட விளைவுகள் ஏற்பட்டன. அவ்வாறான விளைவுகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) 1917ம் ஆண்டு ரஷ்யப் புரட்சியின் பின்னர் ரஷ்யாவில் ஏற்பட்ட மாற்றங்கள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)